சுருக்கம்

மாநில நிதிப் பகிர்வு – மூன்றாம் மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மாநில நிதிப் பகிர்வு – 2010–2011–ஆம் ஆண்டிற்கு பேரூராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் மாநில நிதிப் பகிர்வு தொகை ரூ.276,45,19,280/– ஏப்ரல், 2010 முதல் சனவரி, 2011 வரையில் – நிதி விடுவித்து ஆணையிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை

அரசாணை (ப) எண். 303 **நாள்: 14.6.2010**

31, வைகாசி, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.199, நிதித் (நிகு–4) துறை, நாள் 25.5.2007.
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண். 6700/2010–3/ஈ1, நாள் 07.4.2010.
3. அரசாணை (ப) எண்.241, ந.நி.(ம) கு.வ. துறை, நாள் 17.5.2010.

ஆணை:

மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த முடிவுகளின் அடிப்படையில், 2007–2008ஆம் ஆண்டிலிருந்து மாநில நிதிப் பகிர்வுத் தொகைகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதன்படி, மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்வு பற்றிய அத்தியாயத்தில் உள்ள பரிந்துரைகளின் மீது அரசால் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாநில நிதிப் பகிர்வாக பேரூராட்சிகளுக்கு விடுவிக்க 2010–2011–ஆம் ஆண்டிற்கு ரூ.467,13,27,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.10.00 இலட்சம் வீதம் 561 பேரூராட்சிகளுக்கும் ரூ.56.10 கோடியினை விடுவித்து பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ரூ.24.00 கோடி ஒதுக்கியது போக எஞ்சிய தொகையில், மக்கள் தொகை அடிப்படையில் மாநில நிதி பகிர்வு தொகை ரூ.387,03,27,000/–ஐ (ரூபாய் முன்னூற்று எண்பத்து ஏழு கோடியே மூன்று இலட்சத்து இருபத்து ஏழாயிரம் மட்டும்) 14 சம தவணைகளில் 561 பேரூராட்சிகளுக்கும் ஏப்ரல், 2010 முதல் சனவரி, 2011 வரையில் விடுவித்திட, பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலும், மேற்காணும் மாநில நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து பேரூராட்சியால் செலுத்தப்பட வேண்டிய கடன் நிலுவைகள், மின்கட்டண நிலுவைகள், ஓய்வு பெற்ற பேரூராட்சிகள் பணியாளர்களுக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்கும் பொருட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு தொகை வழங்குதல், பேரூராட்சிகளின் பொறியியல் மற்றும் ஆய்வுப் பிரிவு பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளுதல், பேரூராட்சிகளில் உள்ள உலர் கழிப்பிடங்களை நவீன கழிப்பிடங்களாக மாற்றம் செய்ய பெறப்பட்ட கடனுக்காகவும், சாலை மேம்பாட்டுத் திட்ட கடனுக்காகவும், குடிநீர் திட்டக் கடன்களுக்காகவும் டுபிட்கோ நிறுவனத்திற்கு கடன் மற்றும் வட்டித் தொகை திரும்ப செலுத்தப்பட வேண்டியுள்ளதை மாதத் தவணைகளில் பிடித்தம் செய்திட அனுமதித்து ஆணையிடவும் அரசினைக் கோரியுள்ளார்.

4. மேலே பத்தி 2 மற்றும் 3–ல் உள்ள பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, 2010–2011ஆம் ஆண்டிற்கு பேரூராட்சிகளுக்கான மாநில நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து மக்கள் தொகை அடிப்படையில் ஏப்ரல், 2010 முதல் சனவரி, 2011 வரை 10 மாத தவணைகளில் பேரூராட்சிகளுக்கு விடுவிக்கப்பட வேண்டிய தொகை பின்வருமாறு:-

அ)	2010–2011ஆம் ஆண்டின் மாநில நிதிப் பகிர்வுத் தொகை	–	ரூ. 467,13,27,000/–
ஆ)	ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.10.00 லட்சம் வீதம் 561 பேரூராட்சிகளுக்கும் மாதாந்திர அடிப்படையில் விடுவிக்கப்பட்ட தொகை	–	ரூ. 56,10,00,000/–
இ)	அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு மாநில நிதிப் பகிர்விலிருந்து ஒரே தவணையாக விடுவிக்கப்பட வேண்டிய தொகை	–	ரூ. 24,00,00,000/–
ஈ)	மக்கள் தொகை அடிப்படையில் 561 பேரூராட்சிகளுக்கு பிரித்து வழங்கப்பட வேண்டிய எஞ்சிய தொகை (14 தவணைகள்)	–	ரூ. 387,03,27,000/–
	i) 10 மாதத் தவணைகளில் விடுவிக்கப்பட வேண்டிய தொகை	–	ரூ. 276,45,19,280/–
	ii) மீதி 4 தவணைகளில் பின்னர் விடுவிக்கப்பட வேண்டிய தொகை	–	ரூ. 110,58,07,720/–

5. பத்தி 4–ஈ–ல் குறிப்பிடப்பட்டுள்ள எஞ்சிய மாநில நிதிப் பகிர்வுத் தொகையான ரூ. 387,03,27,000/–ஐ 14 சம தவணைகளாக பகிர்ந்து வழங்கப்பட வேண்டியுள்ளதில், தற்போது ஏப்ரல், 2010 முதல் சனவரி, 2011 வரையில், 10 சம தவணைகளுக்கான மாநில நிதிப் பகிர்வுத் தொகையினை மொத்தமாக ஒப்பளிப்பு செய்து 10 மாதாந்திர சம தவணைகளில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டுமென அரசாணை (நிலை) எண்.199 நிதி (நிகு.IV) துறை, நாள் 25.05.2007–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளவாறு மாதம் ஒன்றுக்கு ரூ.27,64,51,928/– (ரூபாய் இருபத்தேழு கோடியே அறுபத்திநான்கு இலட்சத்து ஐம்பத்தொன்றாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து எட்டு மட்டும்) வீதம் ரூ.276,45,19,280/–ஐ (ரூபாய் இருநூற்று எழுபத்தாறு கோடியே நாற்பத்தைந்து இலட்சத்து பத்தொன்பதாயிரத்து இருநூற்று எண்பது மட்டும்) 10 சம தவணைகளாக ஏப்ரல், 2010 முதல் சனவரி, 2011 வரையில் 2001–ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் 561 பேரூராட்சிகளுக்கும் விடுவித்திட அரசு ஆணையிடுகிறது.

6. மேற்காணும் மாநில நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து பேரூராட்சிகளால் செலுத்தப்பட வேண்டிய கடன் நிலுவைகள், மின்கட்டண நிலுவைகள், ஓய்வு பெற்ற பேரூராட்சிகள் பணியாளர்களுக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்கும் பொருட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு தொகை வழங்குதல், பேரூராட்சிகளின் பொறியியல் மற்றும் ஆய்வுப் பிரிவு பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளுதல், பேரூராட்சிகளில் உள்ள உலர் கழிப்பிடங்களை நவீன கழிப்பிடங்களாக மாற்றம் செய்ய பெறப்பட்ட கடனுக்காகவும், சாலை மேம்பாட்டுத் திட்டக் கடனுக்காகவும், குடிநீர் திட்டக் கடன்களுக்காவும் டுபிட்கோ நிறுவனத்திற்கு கடன் மற்றும் வட்டித் தொகை திரும்ப செலுத்தப்பட வேண்டியுள்ளதை மாதத் தவணைகளில் பிடித்தம் செய்திட அனுமதித்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும், அரசாணை (நிலை) எண். 199 நிதித் (நிகு.IV) துறை நாள் 25.05.2007–ன்படி ஓய்வு பெற்ற பேரூராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குவதற்காக உள்ளாட்சி நிதித் தணிக்கை

இயக்குநருக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை அந்தந்த பேரூராட்சியின் மாநில நிதிப் பகிர்வு மானியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

7. மேலும், பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையினை, சென்னை (வடக்கு) சம்பளக் கணக்கு அலுவலகத்திலிருந்து பெற்று 561 பேரூராட்சிகளுக்கு வழங்குவதற்கும், பத்தி 6–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கடன்கள் மற்றும் இதர இனங்களுக்கான தொகைகளை பிடித்தம் செய்து உரிய துறைகளுக்கு செலுத்துவதற்கும் பேரூராட்சிகள் இயக்குநருக்கு அதிகாரம் அளித்தும் ஆணையிடப்படுகிறது.

8. மேலும், இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

" 3604.00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் –193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி– 1. திட்டத்தில் சேராதது–AA – மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி பேரூராட்சிகளுக்கு மானியங்கள் – பேரூராட்சி நிருவாக இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளவை – 09 உதவி தொகை – 02 மூலதனச் செலவுக்கான உதவித் தொகை **(DPC No.3604-00-193-AA-0927).**

9. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.26091/MAWS/2010, நாள் 09.6.2010–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:-
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
மாநில கணக்காயர், சென்னை–9/18.
நகல்:–
முதன்மைச் செயலரின் தனி செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை – 9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம்,
சென்னை–108.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை,
சென்னை–9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் / நிகு IV/ வழிவகை மற்றும் கடன்கள்) துறை, சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
இருப்புக் கோப்பு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.